திரு. க. சுப்பு ; ஆசிரியர்கள் வெளியேற்றப்பட்டதனால் தான், இந்த பகிஷ்கரிப்பே வந்தது. அதனால், அது வேறு, இது வேறு என்று சொல்வதற்கு இல்லை.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, 41-வது விதியின் கீழ் நான் ஏற்கனவே இதே பிரச்னையைப் பற்றி ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. ஆனால், அதே நேரத்திலே மற்றவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. எனக்கு ஏன் அனுமதி கொடுக்கப்படவில்லை என்று தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்குமானால், அதுபற்றி என் அறையிலே கலந்து பேசலாம். அதை வைத்துக் கொண்டு இங்கே பேசுவதற்கு இப்போது நேரமில்லை.

7 கவன ஈர்ப்பு.

அரசுக் கலைக் கல்லூரி தற்காலிக ஆசிரியர்கள் வெளியேற்றப் பட்டதும், அவர்கள் மேற்கொண்டுள்ள உண்ணாவிரதத் தினால் ஏற்பட்டுள்ள நிலையும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ஆர். உமா நாத், ஆர். கிருஷ்ணன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், பொ. விஜயராகவன் ஆகியோர் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தலைப்பின் கீழ் அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி யினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் ;

"தமிழக அரசினர் கலைக் கல்லூரிகளில் ஐந்தாண்டு முதல் ஏழாண்டு வரை பணியாற்றிய தற்காலிக ஆசிரியர்கள் வெளி யேற்றப்பட்டதையும், மேலும் வெளியேற்றப் பெற இருப்பதை யும் எதிர்த்து அனைவரையும் நிரந்தரமாக்கக் கோரி, மேற்படி ஆசிரியர்கள் மாநிலக் கல்லூரி முன் 20—2—1978ஆம் தேதி யன்று மேற்கொண்டுள்ள உண்ணாவிரதத்தையொட்டி எழுந்துள்ள நிலைமை குறித்து."

மாண்புமிகு திரு. க. உறொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, கலைக் கல்லூரிகளில் பணிபுரியும் உதவிப் பேராசிரியர்கள்/பயிற்றுநர்கள்/விரிவுரையாளர்கள் (Assistant Professors/Tutors/Demonstrators) பதவிக்கு தமிழ்நாடு தேர்வுக் குழுவின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ஆனால்

தற்காலிகமாக காலியாக உள்ள பதவிகளில் பொது விதி 10 (ஏ)(1) மூலம் ஆசிரியர்களை நியமனம் செய்துகொள்ள கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு அதிகாரம் உள்ளது. ஆனால் இவ்வாறு தற்காலிகமாகப் பணியில் உள்ளவர்களை முறைப்படுத்த தமிழ் நாடு கல்வி தனிவிதிகளில் இடமில்லை. ஆதலால் மேற்படி தற்காலிகமாகப் பணிபுரிபவர்கள் முறையாக பணியில் சேரவேண்டு மானால் தமிழ்நாடு தேர்வுக் குழுவின் மூலம் தேர்வுபெற்று நியமனம் பெற வேண்டும்.

2. மேலும் தற்போது தற்காலிகமாகப் பணிபுரியும் அனைவரது பணியையும் அரசால் முறைப்படுத்த இயலாது. தமிழ்நாடு தேர்வாணைக் குழுவின் மூலம் தகுதிபெற்று வருவோரை நியமனம் செய்யும்போது, தற்காலிகமாக பணிபுரிவோரை பணி நீக்கம் செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. ஆனால் 5 ஆண்டு முதல் 7 ஆண்டு வரை பணிபுரிந்த உதவிப் பேரசிரியரோ, பயிற்றுநரோ இதுவரை பதவி நீக்கம் செய்யப்படவில்லை. புவியியல் பிரிவில் தமிழ்நாடு தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப் பட்ட ஒருவர் உதவிப் பேராசிரியராகப் பணியில் அமர்த்தப்பட இருப்பதால் 5 ஆண்டுகள் பணிபுரிந்த ஒரு தற்காலிக உதவிப் பேராசிரியரை 31—3—1978-க்குப் பிறகு பணி நீக்கம் செய்ய வேண்டியுள்ளது.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, இந்த ஆசிரியர்கள் 7 ஆண்டுக் காலம் பணியாற்றிய பிறகு, அவர்கள் இன்னொரு வேலைக்குச் செல்வதற்கு ஏஜ் பார்-ஆகி விடக்கூடிய பிரச்னைக்கு இடமிருக்கிறது. இந்த சிரமம் இருப்பதால், என்னுடைய கேள்வி என்னவென்றால், என்ஜினியரிங் காலேஜ்களிலே டெக்னிகல் டைரக்டர் இப்படிப்பட்ட தற்காலிக ஆசிரியர்களை அவர்களுடைய சர்வீசுகளை ரெகுலரைஸ் செய்வது என்ற முறையை மேற்கொண்டிருப்பதுபோல், கல்வித் துறையில், 'பி' லிங்கில் இதேமாதிரி டெம்பரரியாகப் பணியாற்றிவர்களை முறைப்படுத்தியிருப்பது போல், இதிலே இப்படி 5 முதல் 7 ஆண்டுகள் பணியாற்றியவர்களின் பணியையும் ஏன் ரெகுலரைஸ் செய்யக்கூடாது என்பதுதான்.

மறுபக்கத்தில், நமது முதல் அமைச்சர் அவர்களே, சேலம் லையன்ஸ் கிளப்பில் பேசுகின்றபோது, இம்மாதிரி சர்வீஸ் கமிஷனிலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் வேலைக்கு வந்தால், 4, 5 வருஷங்களாக டெம்பரரியாகப் பணியாற்றக்கூடியவர்கள் வேலையை இழக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது, இப்படிச் சட்டத்திலே இருக்கிறது, இது நியாயம்தானா என்று முதல் அமைச்சர் அவர்களே வெளியே கேட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில்

இப்போது மொட்டயடித்த பி. டபிள்யூ. டீ. என்ஜினியர்களைக் கூட கனம் இராமச்சந்திரன் அவர்கள், அந்த விஷயத்திலே முடிவெடுத்து ஊஸ்ட் செய்த அவர்கள் பணியைக்கூட முதல் அமைச்சர் அவர்கள் சொன்னதன் அடிப்படையிலே ஏற்றுக் கொண்டிருக்கும்போது, அதே போன்ற இந்த ஒரு கேசிலே மட்டும் ஏன் அவர்கள் வெளியே அனுப்பப்பட்டிருகிறார்கள் 1—7—1975–லே 100 பேர்கள் அப்படி வெளியே அனுப்பப்பட்டிருக்கிறார்களே, அப்படிப்பட்டவர்களை திரும்பவும் எடுத்துக் கொள்வதற்கு குறுக்கே நிற்கக் கூடியது என்ன ?

மாண்புமிகு திரு. க. ஹொ. எட்மண்ட் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களுடைய எண்ணங்களை நிறைவேற்றுகிற வகையில் இந்த அரசு நிச்சயமாக அதைப் பரிசீலிக்கும்.

(8) 1978–79ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1978–79ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தன்னுடைய திறமைகளைப் பயன்படுத்தி மிகுந்த அளவுக்குத் தமிழ்நாட்டு மக்களுக்குத் தாங்கள் ஆற்றக்கூடிய கடமைகளை விளக்கி அந்த அறிக்கையை வழங்கியிருக்கிறார்கள். அவருடைய பெரிய முயற்சியை அந்த அறிக்கையைக் காண்கிறபோது நம்மால் உணர முடிகிறதே தவிர, அவருடைய முயற்சிக்கேற்ற பலன் அந்த அறிக்கையின் மூலமாகக் கிடைக்குமா அல்லது தமிழக மக்களின் தேவைக்கேற்ற அளவுக்கு ஒரு அரசு, மாநில அரசு திட்டம் தீட்டி செயலாற்றுவதற்கு வாய்ப்பிருக்கிறதா என்று எண்ணிப் பார்க்கிறபோது, பழமொழியாகச் சொல்வதானால்—'பழைய குருடி கதவைத் திறடி' என்ற பழமொழியைப் போல பல ஆண்டு காலமாக இருந்து வருகிற அந்தச் சூழ்நிலையால் விளைகின்ற அந்தச் சிக்கல் இப்போதும் விளைந்திருக்கிறது.

மாண்புமிகு நிதியமைச்சர் என்று சொல்லுகிறபோது அவர் என்னுடைய நண்பர் என்பதற்காக நான் மகிழ்ச்சியடைந்தாலும் கூட, அவரும் ஒரு சூழ்நிலையில் கைதியாகத்தான் இருக்கிறார் என்பதை, சூழ்நிலையின் கைதியாகத்தான் மாநில அமைச்சர்கள் இருக்க வேண்டிய நிலைமை இந்த நாட்டில் இருக்கிறது என்பதை நான் வருத்தத்தோடு நினைவூட்டாமல் இருக்க முடியவில்லை.